**திருத்தப்பட்டது**

**செய்தி வெளியீடு எண்: 426** **நாள்: 29.7.2009**

**மாண்புமிகு தமிழக துணை முதலமைச்சர் திரு. மு. க. ஸ்டாலின் அவர்களால் இன்று (29.07.2009) நெடுஞ்சாலைத்துறையில் பல்வேறு பதவிகளுக்கான பணி ஆணை வழங்கப்பட்டது.**

நெடுஞ்சாலைத் துறையில் பல்வேறு பதவிகளில் உள்ள காலிப்பணியிடங்களை பதவி உயர்வு மூலம் மட்டுமல்லாது தமிழ்நாடு அரசு பணியாளர் தேர்வாணையத்தின் மூலமும் புதிய பணி நியமனங்கள் நிரப்ப முனைப்பான நடவடிக்கைகள் **மாண்புமிகு தமிழக முதல்வர் கலைஞர்** அவர்களால் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. இந்நடவடிக்கைகளின் ஒரு பகுதியாக, கீழ்காணும் பதவிகளுக்கு தெரிவு செய்யப்பட்ட தகுதியான நபர்களுக்கு 29.07.2009 அன்று புதிய பணி நியமன ஆணைகள் **மாண்புமிகு தமிழக துணை முதல்வர் திரு. மு.க. ஸ்டாலின்** அவர்களால் வழங்கப்பட்டது.

| | | | |
|---|---|---|---|
| 1. | உதவிப் பொறியாளர்கள் | – | 51 |
| 2. | சுருக்கெழுத்து தட்டச்சர் நிலை – 3 | – | 6 |
| 3. | தட்டச்சர் | – | 36 |
| 4. | சாலைப் பணியாளர் (கருணை அடிப்படையில்) | – | 31 |
| | **மொத்தம்** | – | **124** |

தலைமைச் செயலகத்தில் நடைபெற்ற இந்நிகழ்ச்சியில் மாண்புமிகு நெடுஞ்சாலைத் துறை அமைச்சர் திரு. மு. பெ. சாமிநாதன் அவர்களும், நெடுஞ்சாலைத் துறை செயலர் திரு. ஜி. சந்தானம் இ.ஆ.ப., அவர்களும், நெடுஞ்சாலைத் துறை தலைமைப் பொறியாளர் (பொது) திரு. ஒய். ஆர். பாலாஜி, தலைமைப் பொறியாளர் (திட்டங்கள்) திரு. ஹரிராஜ், தலைமைப் பொறியாளர் (தமிழ்நாடு சாலை மேம்பாட்டுத் திட்டம்) திரு. பாலகிருஷ்ணன், தலைமைப் பொறியாளர் (மெட்ரோ) திரு. கோதண்டம், தலைமைப் பொறியாளர் (வடிவமைப்பு) திரு. கோபால், நெடுஞ்சாலை ஆராய்ச்சி நிலைய இயக்குநர் திரு. குற்றாலநாதன் மற்றும் நெடுஞ்சாலைத் துறை அதிகாரிகள் பலரும் கலந்து கொண்டனர்.

29.07.2009 அன்று வழங்கப்பட்ட 124 பணி நியமனங்களுடன் நெடுஞ்சாலைத் துறையில் மூன்றாண்டுகளில் இதுவரை 867 புதிய பணி நியமனங்கள் செய்யப்பட்டுள்ளன என்பது குறிப்பிடத்தக்கது.